வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 25.1.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேசிய வாக்காளர் தினம், இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாள் நமது இந்தியா-நமது வாக்கு என்ற கருப்பொருளுடன் கடைபிடிக்கப்படுகிறது.
- நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடமை உணர்வோடு செயல்பட்டால் மிகப் பெரிய உறுதிப்பாடுகளையும் சாதிக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தேசிய வாக்காளர் தினத்தன்று வாக்காளர்களாக மாறுவது பெருமைக்குரிய விஷயம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- சைக்கிள் ஓட்டுவது உடலுக்கு நல்ல பயிற்சி என்றும், இதனை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் தொழிலாளர் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<u>*முர்மு வாக்காளர் தினம்* 1 (5 )</u>

16 ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடங்கி வைத்து உரையாற்றினார். நமது இந்தியா-நமது வாக்கு என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

*முர்மு வாக்காளர் தினம்* 2 (16)

(வாய்ஸ்)

ஒவ்வொரு வாக்கும் ஒரு மாற்றத்தின் தொடக்கம். பொதுமக்களின் வாக்குப்பதிவு மற்றும் தேர்தல் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது. இதன் 60 ஆவது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில், 2011 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்பட்டது. இத்தினத்தில், வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது, புதிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இணைப்பது மற்றும் வாக்காளர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நாளில் அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்களின் ஊழியர்கள், மற்றும் மாணவர்களால் வாக்காளர் உறுதி மொழி மேற்கொள்ளப்படுகிறது. தேசிய வாக்காளர் தினத்தின் ஒரு பகுதியாக ஆணையத்தின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வும், பேரணிகள், கையெழுத்து இயக்கங்கள், ஊடக பிரச்சார விநியோகம் போன்றவைகள் நடத்தப்படுகின்றன.

*முர்மு வாக்காளர் தினம்* 3 (4)

இது, 100 சதவிகித வாக்குப்பதிவின் இலக்கை அடைய வழிகாட்டுகிறது. அந்த வகையில் எஸ்ஐஆர் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு குடிமகனும் தனது வாக்குரிமையை பயன்படுத்தும் வாய்ப்பு உறுதி செய்யப்படும் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

***மன் கீ பாத்*** 1 (18)

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடமை உணர்வோடு செயல்பட்டால் மிகப் பெரிய உறுதிப்பாடுகளையும் சாதிக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று, அகில இந்திய வானொலி மூலம் மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் குடியரசு தின திருநாளை கொண்டாட இருக்கும் இந்நாளிலும், தேசிய வாக்காளர் தினம் கொண்டாடும் சூழலிலும் தான் இந்த நிகழ்ச்சியில் உரையாற்றுவதாக பிரதமர் தெரிவித்தார். கடந்த 2016 ஆம் ஆண்டு, தாம் மக்களோடு இணைந்து ஒரு சாகச பயணத்தை தொடங்கியது நினைவிருக்கலாம் என்றும், அது இளைய சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமான ஒன்று என்றும் அவர் கூறினார். இந்த காலத்தில் ஸ்டார்ட் -அப் இந்தியா தொடங்கப்பட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார். இந்த பயணத்தின் முக்கிய நாயகர்கள் இளைய தலைமுறையினர் தான் என்றும், அவர்கள் எடுக்கும் புதிய முயற்சிகள் தற்போது வரலாற்றில் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார். உலகின் மூன்றாவது பெரிய ஸ்டார்ட் -அப் நிறுவனங்களை கொண்டதாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் இணைந்த இளைஞர்கள் தரத்தின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். பொருட்களின்

***மன் கீ பாத்*** 2 (10)

தரத்தில் எவ்விதமான சமரசமும் செய்து கொள்ள முடியாது என்று உறுதியேற்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு இந்தியர்களின் வாழ்க்கையிலும், 18 வயது பூர்த்தி அடையும் போது கொண்டாட வேண்டிய ஒன்றாக கருதப்படுகிறது என அவர் தெரிவித்தார். அப்போதுதான் வாக்குரிமை குறித்த விழிப்புணர்வு ஏற்படும் என்றும் கூறினார். 18 வயதான அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டும் என்றும், அதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் வலுப்பெறும்

என்றும் அவர் தெரிவித்தார். இளைய தலைமுறையினர் தற்போது பக்தி உணர்வோடு தங்களின் அனுபவம் மற்றும் வாழ்க்கை முறைகளை பாதுகாத்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

*மன் கீ பாத்* 3 (18)

(வாய்ஸ்)

புதிய தலைமுறைகளை ஈர்க்கும் வண்ணம் தற்போது பஜன் கிளப்பின் மூலம் பஜனை பாடல்கள் ஈர்க்கப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார். ஆன்மீகத்தின் தொடர்ச்சியை இந்த நிகழ்ச்சியின் மூலம் அனுபவிக்க முடியும் என்றும் அவர் கூறினார். மலேஷியாவின் 500 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் தமிழ் மொழியை கற்பிப்பதோடு, தமிழ், தெலுங்கு, பஞ்சாபி உள்ளிட்ட மொழிகளையும் கற்பிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார். மலேஷியாவில் வசிக்கும் இந்தியர்கள் தங்களின் கலாச்சாரத்தை மறந்து விடாமல் ஒடிசி நடனம், பஜனை பாடல்கள் போன்றவற்றையும் இசைத்து வருவது அனைவரையும் கவர்ந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். அந்த மக்களுக்கு வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்துக் கொண்டார். சிறு தானியங்களின் மீதான ஆர்வம் நாடு முழுவதும் தற்போது அதிகரிக்க தொடங்கி உள்ளதாக பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். அந்த வகையில், தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த பெண் விவசாயிகளின் குழு சிறு தானியம் குறித்த உத்வேகத்தை ஏற்படுத்தி உள்ளதை பிரதமர் எடுத்துரைத்தார். அங்குள்ள பெரிய கல்வராயன் மலை கிராமத்தில், மகளிர்

*மன் கீ பாத்* 4 (18)

விவசாய உற்பத்தி நிலையத்தில் 800 பெண்கள் இணைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவர்கள் சிறுதானியங்களை பதப்படுத்தும் ஆலையை நிறுவியதை பிரதமர் சுட்டிக்காட்டினார். தற்போது சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை நேரடியாக சந்தைக்கு கொண்டு

சேர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதேபோல், ராஜஸ்தானில் உள்ள ராம்சரிலும் விவசாயிகள் சிறுதானியம் தொடர்பான நூதன கண்டுபிடிப்புகளை செய்து வருவதாகவும், அங்கே உள்ள ராம்சர் கனிம விவசாயிகள், உற்பத்தியாளர்கள், நிறுவனத்தோடு தொள்ளாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் இணைந்துள்ளனர். இந்த விவசாயிகள் முக்கியமாக கம்பு தானியத்தை பயிர் செய்கிறார்கள். இங்கே, கம்பு பயன்படுத்தப்பட்டு, லட்டுகள் தயார் செய்யப்படுகின்றன. இந்த லட்டுகளுக்கு சந்தையில் அதிக தேவை ஏற்பட்டுள்ளது. இது மட்டுல்லாமல் பல ஆலயங்களில் பக்தர்களுக்கு பிரசாதம் அளிக்கும் போது அதில் சிறுதானியங்கள் பயன்படுத்துகிறார்கள். இத்தகைய முன்னேற்பாடுகளுக்கு தாம் ஆலய நிர்வாகிகளை இதயபூர்வமாக வாழ்த்துவதாகவும் பிரதமர் தமது உரையில் தெரிவித்துள்ளார். சிறு தானியங்களால் அன்னமிடும் விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பதோடு மக்களின் உடல் நலமும் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*பிஎம் வாக்காளர் தின கடிதம் (7)*

தேசிய வாக்காளர் தினத்தன்று வாக்காளர்களாக மாறுவது பெருமைக்குரிய விஷயம் என்றும், அதனை கொண்டாட வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப்பதிவில், தன்னார்வலர்களுக்கு ஒரு கடிதத்தை பகிர்ந்துள்ளார். நாட்டில் ஒரு இளைஞர் முதன் முறையாக, வாக்காளர்களாக, பதிவு செய்யும் தருணத்தை தன்னார்வலர்கள் ஒன்று கூடி கொண்டாட வேண்டும் என்று அந்த கடிதத்தில் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

*சி பி இராதாகிருஷ்ணன்* (6)

16 ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 25 ஆண்டு கால பயணத்தில், இந்தியாவின் தேர்தல் பயணம் வலுவானதாகவும், ஜனநாயகத்தை உள்ளடக்கியதாகவும், அரசியல் சட்டத்தின் மாண்புகளை பின்பற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால்* (15)

சைக்கிள் ஓட்டுவது உடலுக்கு நல்ல பயிற்சி என்றும், இதனை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மத்திய இளைஞர் நலன் மற்றும் தொழிலாளர் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி காரைக்காலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை அவர் இன்று தொடங்கி வைத்தார். கொட்டும் மழையிலும் ஏராளமான கல்லூரி மாணவ-மாணவிகள் பங்கேற்றனர். ஜனநாயகத்தில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். முக்கிய வீதிகள் வழியாக சென்ற சைக்கிள் பேரணி அங்குள்ள அறிஞர் அண்ணா அறிவியல் கல்லூரியில் நிறைவு பெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு மன்சுக் மாண்டவியா, நாடு முழுவதும் மை பாரத் இயக்கத்தின் மூலம் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டு வருவதாகவும், இது போன்ற பயிற்சி இளைஞர்களுக்கு மிகுந்த அவசியம் என்பதால், இளைஞர்கள் அதிக அளவில் சைக்கிளை பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தலைமை தேர்தல் ஆணையர் (15)

16 ஆவது தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி, வாக்காளர் தினத்தை ஒட்டி, தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் அளித்த பேட்டியில், திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் என்பது, ஜனநாயகத்தின் அடித்தளம் என்று கூறினார். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். தகுதி வாய்ந்த ஒவ்வொரு வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதை உறுதி செய்வதற்கும், வாக்காளர் பட்டியலில் இடம் பெற தகுதி இல்லாதவர்களின் பெயர்கள் நீக்கப்படுவதற்கும் இந்த பணிகள் வழிவகை செய்வதாக அவர் தெரிவித்தார். பீகார் மாநிலத்தில் SIR பணிகள் வெற்றிகரமான முடிக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டதாகவும், தற்போது 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமூகமான முறையில் இந்த பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு ஞானேஸ்குமார் தெரிவித்தார். மற்ற மாநிலங்களில் SIR பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

தேசிய வாக்காளர் தினம் – புதுச்சேரி (14)

புதுச்சேரி அரசின் சார்பில், 16 ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக பங்கேற்ற தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவகர் பங்கேற்றார். மாநிலத்தில் துல்லியமான வாக்காளர் பட்டியல்களின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். மேலும், 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கு முன்னதாக இளைஞர்கள் மற்றும் முதன்முறை வாக்காளர்களின் பங்களிப்பை அவர் எடுத்துரைத்தார். மாறிவரும் டிஜிட்டல் துறையில் தவறான தகவல்களுக்கு எதிராகவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு குலோத்துங்கன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் துவக்கத்தில்

முதன் முறை வாக்காளர்கள் பாராட்டப்பட்டு, உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். மேலும், தொழில்நுட்ப ஆதரவு, ஊடக ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் சிறந்த செயல் திறனுக்காக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு மாநில விருதுகள் வழங்கப்பட்டன.

<u>*குடியரசு தினம்*</u> (10)

நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழா நாளை கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாட்டு மக்களிடம் இன்றிரவு உரையாற்ற உள்ளார். குடியரசு தின விழா வழக்கமான உற்சாகத்துடன் நாடு முழுவதும் நாளை கொண்டாடப்பட உள்ளது. இதனை ஒட்டி தலைநகர் டெல்லி மட்டும் அல்லாமல் நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லைப்பகுதிகளிலும், ரயில் மற்றும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவின் உரை ஆகாஷ்வாணி உள்ளிட்டவைகளில் இன்றிரவு 7 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

<u>*பத்ம விருது*</u> (13)

இந்த ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. கடைசியாக கிடைத்த தகவலின் படி, பத்மஸ்ரீ விருதுக்கு 54 பேரை அரசு தேர்வு செய்துள்ளது. வழிபாடு மற்றும் கல்வியில் கர்நாடகாவை சேர்ந்த அன்கே கவுடாவிற்கும், மருத்துவத்தில் மகராஷ்டிராவை சேர்ந்த அமிர்தா பெர்னாண்டஸ்க்கும், விளையாட்டு துறையில் மத்திய பிரதேசத்தை சேர்ந்த பக்வ தாஸ் ரைத்வாருக்கும், கலைத் துறையில் மகராஷ்டிராவை சேர்ந்த பிக்யா லடாக்யா திண்டாவிற்கும், உத்திரபிரதேசத்தை சேர்ந்த சிரஞ்சி லால் யாதவிற்கும், சமூக பணிக்காக ஜம்மு – காஷ்மீரை சேர்ந்த பிரிஜ் லால்பட் மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்தை சேர்ந்த புத்ரி தாட்டி, ஒடிசாவை சேர்ந்த சரண் ஹெம்பிராம் ஆகியோருக்கும் வழங்கப்படுவதாக

தெரிவிக்கப்பட்டுள்ளன. சமூகத்துறையில் தமிழ்நாட்டை சேர்ந்த திருவாரூர் பக்தவச்சலத்திற்கும், கலைத்துறையில் தமிழ்நாட்டை சேர்ந்த விஷ்வரூர் பக்தவச்சலத்திற்கும் வழங்கப்பட உள்ளது.

------------